வட ஆர்க்காடு மாவட்டத்திலிருந்து மாம்பழச்சாறு ஏற்றுமதி

* 876 வின.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-ஆம் ஆண்டில், வட ஆர்க்காடு மாவட்ட கூட்டுறவு மார்க்கெட்டிங் சப்ளை சொசைட்டியிலிருந்து ரஷ்யாவுக்கு மாம்பழ ரசம் ஏற்றுமதி செய்யப்பட்டதா?

(இ) ஆம் எனில், அது எவ்வளவு ரூபாய் மதிப்புள்ளது?

(உ) மாம்பழ ரசம் அனுப்பக்கோரி வேறு நாடுகளிலிருந்தும் ஆர்டர்கள் ஏதேனும் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) ரூ. 1·46 லட்சம்.

(உ) இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : வெளிநாடுகளில் நம் நாட்டில் தயாரிக்கும் மாம்பழ ரசத்தை மிகவும் விரும்பிச் சாப்பிடுவதாகக் கேள்விபபடுகிறோம். ஆகவே, மேலும் இதை ஏற்றுமதி செய்வதற்கு இதர நாடுகளுடன் நம் அரசாங்கம் தொடர்பு வைத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனார் : இதர நாடுகளோடு அல்ல, இதர நாட்டிலுள்ள வாணிக நிறுவனங்களுடன பேச்சு வார்த்தை நடந்து வருகிறது.

திருமதி. த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, ரூ. 1 லட்சம் பெறுமான ஜூஸ் போய் இருக்கிறது என்று சொல்கிறார்கள். மீண்டும் அதிகமாகத் தேவை என்று ஆர்டர்ஸ் வந்து இருக்கிறதா? அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, (உ) என்ற உப கேள்வியில் ஆர்டர்கள் இல்லை என்று ஏற்கெனவே நான் பதில் சொன்னேன். ஆனாலும் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டு வருகின்றன.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, அந்நியச் செலாவணி ஈட்டித் தருகின்ற அந்தத் தொழிற்சாலையில் சென்ற ஆண்டு ரூ. 1,46,000 அளவுக்கு அந்நியச் செலாவணி கிடைத்து இருக்கிறது. இதை மனதில் வைத்துக் கொண்டு வருஷத்திற்கு 3 மாதம் மட்டுமதான் இந்த மாம்பழச்சாறு தயார் செய்ய முடிகிறது. மீதியுள்ள மாதங்களில் மூடிக் கிடக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் அதிக அக்கறை எடுத்துக் கொண்டு மாம்பழச்சாறு தவிர மற்ற சீசன்களில் வேறு பழரசம் தயாரிக்க நடவடிக்கை எடுப்பார்களா?

1972 எப்ரல் 4]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்** : தக்காளி ரசமும் தயாரிக்கப் படுகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : தலைவரவர்களே, மாம்பழ ஜூசிலிருந்து அல்வா தயாரிக்கிறார்கள். அது இன்னும் அதிகமான நாட்களுக்கு இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, ஜூசிலிருந்து அல்வா தயார் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனர்** : தலைவரவர்களே, அல்வா தயாரிப்பதாக இல்லை. ஆனால் இறுக்கமான சாறு தயார் செய்யப்படு கிறது.

**திரு. கு. காமாட்சி** : தலைவரவர்களே, மாம்பழச்சாறுக்குக் கிராக்கி இருப்பது போல் வாழைப்பழத்திற்கும் வெளிநாட்டில் அதிகக் கிராக்கி இருக்கிறது. வாழைப்பழத்தை ஏற்றுமதி செய்தால் கெட்டு விடுகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, அதையும் பதப்படுத்தி, ரசமாக்கி வெளிநாட்டிற்கு அனுப்பும் திட்டம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்** : தலைவரவர்களே, வாழைப் பழத்தை டின்களில் அடைக்காமல் அனுப்ப வேண்டியிருக்கிறது. அதை வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கவனித்துக் கொண்டிருக் கிறார்கள். இப்போது வேலூரிலிருந்து அனுப்பப்படுவது ரசங்கள். அவற்றை டின்களில் அடைத்து வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக் கிறோம்.

**திரு. எஸ். முருகையன்** : தலைவரவர்களே, சென்ற ஆண்டு இந்த பழச்சாறு தொழிற்சாலை எத்தனை நாள் வேலை செய்தது, எவ்வளவு இலாபம் வந்தது ? அதிகப்படியான இலாபம் கிடைப்பதற்கு வெளி நாட்டிற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சென்று இருந்தார்களா, எவ் வளவு ஆர்டர்கள் வாங்கிக்கொண்டு வந்தார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனர்** : எத்தனை நாள் வேலை செய் தது என்ற குறிப்பு என்னிடத்தில் இப்போது இல்லை. ஆனால், ஏறத் தாழ 80 டன் ஏற்றுமதி செய்யப்பட்டது. அதன் மூலம் டன் ஒன்றுக்கு ரூ. 100 இலாபம் கிடைத்தது. வெளிநாட்டிற்குச் சென்று பார்த்து மார்க்கெட் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. வெளிநாட்டில் உள்ள தொழில் நிறுவனங்களோடு நாம் இப்போது பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டு இருக்கிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM : Has this Government thought about producing dry jams out of plantains and jack fruits as in Kerala ?

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, samples of Jam were produced in this factory. But there was no sale for it. Therefore, it is not being produced in quantity.